©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 47] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 21, 2018
கார்த்திகை 5, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 109, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G2)த் துறை, 7 செப்டம்பர் 2018.]*

தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 22ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05–10–2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–இல், 575–577 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் II(2)/தொ.வே/667/2016 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (3)–இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் வகைகளைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, அதன் நெடும்பத்தி (2)–இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை, ஆய்வாளர்களாக இதனால் நியமிப்பதுடன், அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்ட பகுதியில் செயல்படும் வகையில், நெடும்பத்தி (4)–இன் நிகரான பதிவுகளில் உள்ளூர் எல்லைகளையும் வரையறை செய்கிறார்.

**அட்டவணை**

| *தொடர் எண்* | *நபர்கள்* | *நிறுவனங்களின் வகை* | *உள்ளூர் எல்லைகள்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | செயலாளர்/ தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii),(iv) மற்றும் (v)–இன் கீழ் வருகிற அனைத்து நிறுவனங்கள். | 1965 ஆம் ஆண்டு மிகை ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1965) 27ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் எல்லைகள். |

| *தொடர் எண்* | *நபர்கள்* | *நிறுவனங்களின் வகை* | *உள்ளூர் எல்லைகள்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 2 | தொழிலாளர் துறை இணை ஆணையர்–I, சென்னை. | | |
| 3 | தொழிலாளர் துறை இணை ஆணையர்–II, சென்னை. | | |
| 4 | தொழிலாளர் துறை இணை ஆணையர், வேலூர். | | |
| 5 | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | | |
| 6 | தொழிலாளர் துறை இணை ஆணையர், மதுரை. | | |
| 7 | தொழிலாளர் துறை இணை ஆணையர், கோயம்புத்தூர். | | |
| 8 | தொழிலாளர் துறை இணை ஆணையர், சேலம். | | |
| 9 | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருநெல்வேலி. | | |
| 10 | தொழிலாளர் துறை இணை ஆணையர், திண்டுக்கல். | | |
| 11 | தொழிலாளர் துறை இணை ஆணையர், குன்னூர். | | |
| 12 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர்–I, அலுவலகம், சென்னை. | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii),(iv) மற்றும் (v)–இன் கீழ் வருகிற அனைத்து நிறுவனங்கள். | 1965 ஆம் ஆண்டு மிகை ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1965) 27ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் எல்லைகள். |
| 13 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர்–II, அலுவலகம், சென்னை. | | |

| *தொடர் எண்* | *நபர்கள்* | *நிறுவனங்களின் வகை* | *உள்ளூர் எல்லைகள்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 14 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், வேலூர். | | |
| 15 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. | | |
| 16 | தொழிலாளர் துறை இணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், மதுரை. | | |
| 17 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர். | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii),(iv) மற்றும் (v)–இன் கீழ் வருகிற அனைத்து நிறுவனங்கள். | 1965 ஆம் ஆண்டு மிகை ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1965) 27ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் எல்லைகள். |
| 18 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், சேலம். | | |
| 19 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி. | | |
| 20 | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், திண்டுக்கல். | | |
| 21 | தொழிலாளர் துறையின் அனைத்து உதவி ஆணையர், (செயலாக்கம்) | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii),(iv) மற்றும் (v)–இன் கீழ் வருகிற அனைத்து நிறுவனங்கள். | 1965 ஆம் ஆண்டு மிகை ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1965) 27ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் எல்லைகள். |

| தொடர் எண் | நபர்கள் | நிறுவனங்களின் வகை | உள்ளூர் எல்லைகள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 22 | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மலைத்தோட்டம்). | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (iii)–இல் வரையறுக்கப்பட்டவாறான மலைத் தோட்டங்கள். | 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 69/1951)கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் எல்லைகள். |
| 23 | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மகளிர் நலன்) திருநெல்வேலி. | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii), (iv) மற்றும் (v)–இல் வரையறுக்கப்பட்டவாறான நிறுவனங்கள். | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள். |
| 24 | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மகளிர் நலன்) கோயம்புத்தூர். | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii),(iv) மற்றும் (v)–இல் வரையறுக்கப்பட்டவாறான நிறுவனங்கள். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். |
| 25 | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மகளிர் நலன்) சென்னை. | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii),(iv) மற்றும் (v)–இல் வரையறுக்கப்பட்டவாறான நிறுவனங்கள். | சென்னை, வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள். |
| 26 | தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்கள் | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (ii), (iv) மற்றும் (v)–இல் வரையறுக்கப்பட்டவாறான அனைத்து நிறுவனங்கள். | 2009 ஆம் ஆண்டு சட்ட முறை எடையளவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் எல்லைகள். |
| 27 | தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள் | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 36/1972) 2–ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (d)–இன் துணை பகுதிகள் (iv), (v) மற்றும் (vi)–இல் வரையறுக்கப்பட்டவாறான அனைத்து நிறுவனங்கள். | |
| 28 | தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டு ஆணையர்கள்/ இணை மேம்பாட்டு ஆணையர்கள் | சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள் |

**சுனில் பாலிவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 83, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 14 செப்டம்பர் 2018.]*

**1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதப்பட்டுள்ள பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.**

**(2) இது தொடர்பாக 17–12–2018 அன்று அல்லது அதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனைச் சென்னை–600 006இல் உள்ள DMS வளாகம், தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.**

## வரைவு அறிவிக்கை

**1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 17–09–2014–ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II–பிரிவு–2–இல், 639 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே/556/2014 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காலணி தயாரிப்பு தொழிலில் பணியமர்த்தப்பட்டுக் கீழ்க்காணும் விவர அட்டவணையின் நெடும்பத்தி (1)–இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்ட பணியாளர் வகையினருக்கு அதன் (2)–ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டவாறான குறைந்தளவு ஊதிய வீதங்களை இதனால் திருத்தியமைக்கிறார்.**

### விவர அட்டவணை

### காலணி தயாரிப்பு தொழிலில் வேலைவாய்ப்பு

| | *பணியாளர்களின் வகைகள்* (1) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* (மாதமொன்றுக்கு) (2) | |
|---|---|---|---|
| | | *மண்டலம்-A (ரூ. காசு)* | *மண்டலம்-B (ரூ. காசு)* |
| **I.** | **நிருவாகப் பணியாளர்கள் :** | | |
| (1) | கணக்காளர் (உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்) | 6348.00 | 6258.00 |
| (2) | கண்காணிப்பாளர் / பண்டகக் காப்பாளர் | 5993.00 | 5904.00 |
| (3) | எழுத்தர்/காசாளர்/தட்டச்சர்/நேரங்குறிப்பவர்/கணினி இயக்குபவர் | 5640.00 | 5550.00 |
| (4) | ஓட்டுநர்/இயந்திரக் கம்மியர்/மின்கம்மியர் | 5640.00 | 5550.00 |
| (5) | காவலாள்/உதவியாள்/பெருக்குபவர்/தோட்டக்காரர் (தேர்ச்சி பெறாதவர்கள்) | 4933.00 | 4843.00 |
| **II.** | **தொழில்நுட்பப் பணியாளர்கள்** | | |
| (1) | தேர்ச்சி பெற்றவர்கள் | 5640.00 | 5550.00 |
| (2) | ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள் | 5286.00 | 5197.00 |
| (3) | தேர்ச்சி பெறாதவர்கள் | 4933.00 | 4843.00 |

**விளக்கங்கள்: (1)** மண்டலம் A மற்றும் மண்டலம் B ஆகியவை பின்வரும் பகுதிகளை கொண்டிருக்கும்:–

மண்டலம்–A : அனைத்து மாநகராட்சிகள்.

மண்டலம்–B : மாநகராட்சிகள் தவிர ஏனைய அனைத்துப் பகுதிகள்

**(2) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010-ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001-ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகளாகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 30.00 (முப்பது ரூபாய் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) அண்மைக் கால நுகர்வோர் விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு திங்களும் அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**சுனில் பாலிவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 84, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 14 செப்டம்பர் 2018.]*

1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதப்பட்டுள்ள பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இது தொடர்பாக 17–12–2018 அன்று அல்லது அதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–600 006 இல் உள்ள DMS வளாகம், தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 13–08–2014–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு–2–இல், 533–534 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/477/2014 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காகித உற்பத்தித் தொழிலில் இயந்திரம் மூலம் காகிதம் தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக நேர்கின்ற நடைமுறைப் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### காகித உற்பத்தித் தொழிலில் இயந்திரம் மூலம் காகித தயாரிப்பு மற்றும் அது தொடர்பாக நேர்கின்ற நடைமுறைப் பணிகளில் வேலைவாய்ப்பு

| *பணியாளர்களின் வகைகள்* | மாதமொன்றுக்கான *குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள் (ரூ. காசு)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **1. தேர்ச்சி பெறாதவர்கள் :** | |
| (i) ஒட்டுநர் | 5890.00 |

| | | |
|---|---|---|
| (ii) | அச்சகப் பணியாளர் | 5840.00 |
| (iii) | அனைத்து வகை தொழிலாளர் | |
| **(2)** | **ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | 6044.00 |
| (i) | சாயமேற்றுபவர் | |
| (ii) | இயந்திரம் கவனிப்பவர் | |
| (iii) | தூய்மைப்படுத்துபவர் | |
| (iv) | இழைக்கம்பி பணியாளர் | |
| (v) | தையல் மற்றும் சிப்பம் கட்டுபவர் | |
| (vi) | பொருத்துநர் உதவியாளர்கள் மற்றும் இதர உதவியாளர்கள் | |
| (vii) | கூழ்ப்படுத்துபவர் | |
| **(3)** | **தேர்ச்சி பெற்றவர்கள்** | 6450.00 |
| (i) | கொதிகலன் இயக்குபவர் | |
| (ii) | நீர் சுத்திகரிப்பு ஆலையின் இயந்திரம் இயக்குபவர் | |
| (iii) | ஈருருளை அழுத்துகருவி இயக்குபவர் | |
| (iv) | காகித இயந்திரம் இயக்குபவர் | |
| (v) | கூழ் தயாரிப்புக் கருவி இயக்குபவர் | |
| (vi) | வெட்டுக்கருவி இயக்குபவர் | |
| (vii) | அதனையொத்த இதர கருவிகளை இயக்குபவர்கள் | |
| (viii) | மின் பணியாளர் | |
| (ix) | பற்றவைப்பவர் | |
| (x) | கம்மியர் பொருத்துநர் | |
| (xi) | தச்சர் | |
| (xii) | கருமார் | |
| (xiii) | பாவுதள முடிப்பர் | |
| (xiv) | கடைசல் பணியாளர் | |
| **(4)** | **உயரளவு தேர்ச்சி பெற்றவர்** | |
| | மேற்பார்வையாளர் | 6806.00 |
| **(5)** | **பல்வகைப் பணியாளர்** | |
| (i) | கணக்காளர் | 6450.00 |
| (ii) | தட்டச்சர் எழுத்தர் ஓட்டுநர் | 5942.00 |
| (iii) | தரக் காவலாள் | 6044.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ.36.25 (முப்பத்து ஆறு ரூபாய் இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**சுனில் பாலிவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை(2D) எண்.89, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 05 அக்டோபர் 2018.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இது தொடர்பாக 12–01–2019 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–600 006, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் துறை ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 26.11.2014ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2 – இல் 761 மற்றும் 762 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/(LE)/712/2014 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் மோட்டார்வண்டி பணிக்களரி தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**மோட்டார்வண்டி பணிக்களரியில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொனறுக்கு)* | | | |
|---|---|---|---|---|
| | *மண்டலம் A (மாநகராட்சிகள்)* | *மண்டலம் B (அனைத்து வகையான நகராட்சிகள்)* | *மண்டலம் C (நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் பாளையங்கள்)* | *மண்டலம் D (ஏனைய இடங்கள்)* |
| *(1)* | *(2)* | | | |
| **1. நிருவாகம்** | | | | |
| | ரூ.காசு. | ரூ.காசு. | ரூ.காசு. | ரூ.காசு. |
| (1) மேலாளர் | 8995.00 | 8713.00 | 8458.00 | 8177.00 |
| (2) உதவி மேலாளர் | 8713.00 | 8494.00 | 8235.00 | 8013.00 |
| (3) கணக்காளர் | | | | |
| (4) காசாளர் | 8561.00 | 8340.00 | 8106.00 | 7885.00 |
| (5) பண்டக சாலைக் காப்பாளர் | | | | |
| (6) தட்டச்சர் | | | | |
| (7) எழுத்தர் | 8387.00 | 8177.00 | 7978.00 | 7766.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| (8) நேரக் காப்பாளர் | 8118.00 | 7953.00 | 7766.00 | 7579.00 |
| (9) ஏவலாள் | | | | |
| (10) காவலாள் | 7733.00 | 7579.00 | 7439.00 | 7310.00 |
| **(11)** அலுவலக உதவியாள் | | | | |
| II **மேற்பார்வை:** | | | | |
| (1) முதலாள் | 8995.00 | 8713.00 | 8458.00 | 8177.00 |
| (2) மேற்பார்வைளர் | 8713.00 | 8494.00 | 8235.00 | 8013.00 |
| (3) சார்ஜ்மேன் (Chargemen) | | | | |
| (4) பணிக்களரி கருவி காப்பாளர் | 8118.00 | 7953.00 | 7766.00 | 7579.00 |
| **III. தேர்ச்சி பெற்றவர்:** | | | | |
| **(1)** இயந்திரக் கம்மியர் | 8713.00 | 8494.00 | 8248.00 | 8013.00 |
| **(2)** பெஞ்ச் பிட்டர் | 8561.00 | 8340.00 | 8106.00 | 7885.00 |
| **(3)** உதவி இயந்திரக் கம்மியர் | | | | |
| **(4)** பொருத்துநர் | | | | |
| **(5)** மின்கம்மியர் | | | | |
| **(6)** கருமான் | | | | |
| **(7)** தச்சர் | | | | |
| **(8)** தகரவேலை செய்பவர் | | | | |
| **(9)** கடைசல் பிடிப்பவர் | | | | |
| **(10)** லைனர் | | | | |
| **(11)** தெளிப்பு வண்ணம் பூசுபவர் | | | | |
| **(12)** உதவி முதலாள் | | | | |
| **(13)** பற்றவைப்பவர் | | | | |
| **(14)** இயந்திரப் பணியாளர் | | | | |
| **(15)** தையற்காரர் **(16)** வார்ப்படம் செய்பவர் | 8387.00 | 8177.00 | 7978.00 | 7766.00 |
| **(17)** வண்ணம் பூசுபவர் | 8154.00 | 7966.00 | 7779.00 | 7604.00 |
| **(18)** வைண்டர் (கட்டுனர்) | 8387.00 | 8177.00 | 7978.00 | 7766.00 |
| **(19)** டயர் பணியாளர் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (20) மின்கலப் பணியாளர் | | | | |
| (21) வல்கனைசர் (ரப்பர் பற்றவைப்பவர்) | | | | |
| (22) உதவி இயந்திரப்பணியாளர் | | | | |
| (23) உதவி பற்றவைப்பவர் | 8118.00 | 7953.00 | 7766.00 | 7579.00 |
| (24) பணிக்களரி ஓட்டுநர் | | | | |
| (25) எண்ணெய்ப் பசையிடுபவர் | 7824.00 | 7672.00 | 7509.00 | 7357.00 |
| **IV. ஓரளவு தேர்ச்சி பெற்றவர்:** | | | | |
| (1) உதவி பற்ற வைப்பவர் | 8213.00 | 8036.00 | 7849.00 | 7662.00 |
| (2) உதவி கருமான் | | | | |
| (3) உதவி தகர வேலை செய்பவர் | | | | |
| (4) உதவி மின்கம்மியர் | | | | |
| (5) உதவி வண்ணம் பூசுபவர் | 8036.00 | 7860.00 | 7684.00 | 7509.00 |
| (6) சம்மட்டி அடிப்பவர் | | | | |
| (7) மசகெண்ணெய் உதவியாளர் | | | | |
| (8) பற்றவைப்பவர் உதவியாளர் | 7898.00 | 7744.00 | 7579.00 | 7428.00 |
| **V. தேர்ச்சி பெறாதவர்:** | | | | |
| (1) துப்புரவப் பணியாளர் | | | | |
| (2) பெருக்குபவர் | | | | |
| (3) சுத்தம் செய்பவர் | | | | |
| (4) உதவியாள் | 7733.00 | 7579.00 | 7439.00 | 7310.00 |
| (5) தண்ணீர் எடுத்துச் செல்பவர் | | | | |
| (6) பெட்ரோல் பம்பு இயக்குபவர் | | | | |

**விளக்கங்கள்:**

**1. அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது திங்கள் ஒன்றுக்கு ரூ.45.40 (நாற்பத்தைந்து நாற்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டில் சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது.

(3) நாள் ஊதியத்தை கணக்கிட மாத ஊதியத்தை 26—ஆல் வகுக்க வேண்டும்.

(4) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள், அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதை ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**சுனில் பாலிவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.